தனிக் கேள்வி போட்டால் தைவான் நாட்டுப் படகுகளைப் பற்றிய விவரங்கள் முழுவதையும் அளிக்க இயலும். வலைகள் சேதத்தை பற்றியும், அதற்கு நஷ்ட ஈடு எந்த வகையில் கொடுக்கப்படுகிறது என்பதைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். சேதப்படுத்தியது யார் என்பதைக் கண்டறிந்து, அதற்கான நடவடிக்கைகளை அவர்கள் மீது எடுத்து அவர்களிடம் இருந்துதான் நஷ்ட ஈட்டைப் பெற்றுத் தர முடியும். இயற்கைச் சேதங்கள், புயல், பெரு வெள்ளம் போன்றவைகளினால் சேதம் ஏற்படும்போது அரசே தலையிட்டு அத்தகைய சேதங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கின்றது. ஆனால் தனியார்கள் மூலம் சேதப்படுத்தப்பட்டால், அவர்கள் யாரென்று கண்டறிந்து அவர்களிடம் இருந்துதான் நஷ்ட ஈட்டை பெற்றுத் தர முடியும். ஆனால் அப்படி சேதப்படுத்துகிறவர்கள் யார் என்று கண்டு பிடிப்பதிலேதான் தகராறே ஏற்படுகிறது. அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மீனளப் பயிற்சி நிலையம், மண்டபம்.

***வினா எண். 22—திரு. த. இராமசாமி :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்டபத்தில் பயிற்சி நிலையம் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது ?

(ஆ) எத்தனை பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது ?

(இ) பயிற்சி பெற்ற எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு தரப்பட்டது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) மண்டபத்திலுள்ள மீனளப் பயிற்சி நிலையம் 1964ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23ஆம் நாளில் ஆரம்பிக்கப் பட்டது.

(ஆ) இதுவரை 768 மீனவர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

(இ) பயிற்சி பெற்ற மீனவர்களில் ஏறத்தாழ நானூறு பேர்கள் அரசு மற்றும் தனியார் விசைப் படகுகளில் வேலையில் அமர்ந்துள்ளதாக அறியப்படுகிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மண்டபத்தில் உள்ள பயிற்சி நிலையம் சரியாக நடத்தப்பட வில்லை, அதற்கான உபகரணங்கள் வைக்கப்படவில்லை என ஏற்கனவே இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ளது. அதைத் திருத்தி அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா? பயிற்சி பெற்று வெளியேறியவர்களுக்கு உறுதியான வேலை அளிக்க—அதாவது லாரிகள் ஓட்டக்கூடியவர்களுக்கு கொடுக்கப்படுவதைப் போன்று—

1981 ஜனவரி 24]

லைசன்சு கொடுக்கப்படுவதுபோன்று—விசைப் படகுகளை ஓட்டுவதற்கும் லைசன்சு கொடுத்து, அதில் பயிற்சி பெற்றவர்களைத்தான் வேலைக்கு வைத்துக் கொள்ளவேண்டும் என்று முடிவு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மண்டபத்தில் உள்ள பயிற்சி நிலையத்தின் நிலைமைகளைப் பற்றிய விவரக்குறிப்புகள் எதுவும் இல்லை. எனக்குத் தரப்பட்டிருக்கிற குறிப்பில், சென்னை, கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, குளச்சல், மண்டபம் போன்ற இடங்களில் பயிற்சி நிலையங்கள் உள்ளன. மற்ற இடங்களில் 50 பேர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டால், மண்டபத்தில் 60 பேர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படுகிறது. வசதிக் குறைவு எதுவும் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போன்று, அதன் மீது அரசு தக்க கவனம் செலுத்தி குறைபாடுகளை நீக்குவதற்கான முயற்சியிலே ஈடுபடும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பயிற்சி பெற்றவர்களில் பல பேர்களுடைய விவரக் குறிப்புகள் இல்லை. மொத்தம் 768 பேர்களுக்கு மேல் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். எங்கெங்கே சேர்ந்தார்கள் என்ற விவரத்தை அனுப்பினால் யார் யாருக்கு வேலை இல்லை என்பதை அறிய முடியும். 400 பேர்களுடைய விவரம் தான் தெரிகின்றது. மற்றவர்களுடைய விவரங்கள் தெரியவில்லை. வேலையில்லாமல் இருப்பவர்களானால் அவர்களை வேலையில் அமர்த்துவதற்கு நிபந்தனைகள் விதித்து, முக்கியமான தொழில் நடத்துகிறவர்கள் களை, இப்படிப்பட்ட பயிற்சி பெற்றவர்களைத்தான் நியமிக்க வேண்டும் என்பதைப் பற்றி ஆலோசிக்கலாம். இப்போது இருக்கிறதா, இல்லையா என்பது குறித்த விவரக் குறிப்பு இல்லை. அதுபற்றி ஆராயப்படும்.

திரு. த. வேணுகோபால்: தலைவர் அவர்களே, பயிற்சி பெறுகின்றவர்களுக்கு தற்போது கொடுக்கப்படும் ஊதியத் தொகையை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது பயிற்சி பெறுகின்றவர்களுக்கு மாதம் 75 ரூபாய் உதவித் தொகையாகக் கொடுக்கப்படுகிறது. அதை உயர்த்தித் தருகிற செயற்குறிப்பு இப்போது அரசிடம் இல்லை.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற விலைவாசி முன்பு இருந்ததை விட அதிகமாக இருக்கிறது. ஆரம்பத்தில் ரூ. 50 உதவித் தொகை என்று இருந்ததை, பின்னர் ரூ. 75 என்கிற அளவிற்கு உயர்த்தப்பட்டது. ஆனால், அதற்குப் பின்னர் விலைவாசி அதிகரித்து விட்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

டது. அதனால் நமக்குக் கூட சம்பளத்தை அதிகரித்துக்கொண்டு விட்டோம். இந்த நிலையில், அங்கே பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கும் கூடுதலாக உதவித்தொகை கொடுக்க அரசு முன் வருமா?

இரண்டாவதாக, அந்தப் பயிற்சிப் பள்ளியில் படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கி விசைப்படகு வழங்குவது என்றும், ஒவ்வொரு விசைப்படகிலும் இந்தப் பயிற்சிப் பெற்ற ஒருவர் பணி செய்யவேண்டும் என்றும் இருந்தது. தற்போது விசைப் படகு வழங்குவதாகத் தெரியவில்லை. அதற்கும் இப்போது வழி இல்லை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பயிற்சியைப் பற்றிய விளக்கம் தேவையில்லை. சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : அந்த டிரெயினிங் எடுத்தவர்களுக்கும் இப்போது வேலை கிடைக்கவில்லை. ஆகவே, மாநில அரசு அல்லது மத்திய அரசு பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற மாணவர்கள் இத்தனை சதவிகிதம்பேர் ஒவ்வொரு விசைப்படகிலும் பணியாற்ற வேண்டும் என்கிற உத்தரவை மாநில அரசு போடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுபற்றிய உத்தரவு இப்போது இருக்கிறதா, இல்லையா என்ற விவரக் குறிப்புகள் இல்லை. ஆனால் இது பற்றி நான் முதலிலே சொன்னேன். அது ஆராயப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீனளப்பயிற்சிக்கு எந்த வகுப்பு வரை படித்து இருக்க வேண்டும்? இந்தப் பயிற்சிக்கு ஜாதி வித்தியாசம் இல்லாமல் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தப் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் 18 வயதுக்கு மேல் 35 வயதிற்குள் இருக்கவேண்டும். தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்து இருக்க வேண்டும்.

சர்க்கரை விற்பனை.

*வினா எண் 23—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கள்ள மார்க்கட்டில் சர்க்கரை அதிக விலைக்கு விற்பதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : லெவி சர்க்கரையின் சில்லரை விலை கிலோ ஒன்று ரூ. 3·50 என நிர்ணயிக்கப்பட்டு தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,